


சிவகங்கையில் மாநில இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் தமிழகத்திற்கு நீட்தேர்விலிருந்துவிலக்கு அளிக்கக்கோரி குடியரசுத் தலைவரை வலியுறுத்தும் 50லட்சம் அஞ்சல் அட்டை அனுப்பும் கையெழுத்து இயக்கத்தினைகூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். இதில் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, மாநில மாணவரணி இணைச்செயலாளர் பூரணசங்கீதா, காரைக்குடி நகர்மன்றத்தலைவர் சே.முத்துதுரை ஆகியோர் பங்கேற்றனர்.




கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி,மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் 'நீட் விலக்கு நம் இலக்கு' என்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் முன்னிலையில் சென்னை தெற்கு சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் துவக்கி வைத்தார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை,கருப்பசாமி கோட்டையப்பன், மருத்துவ அணி அமைப்பாளர் கணேஷ் ராஜா, மாலை ராஜா,லட்சுமணன்,சுப்பிரமணியன், சரவணன், ராஜ், சுரேஷ், தர்மன், மீரான் மைதீன், நமச்சிவாயம் உள்பட கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

# நெல்லையில் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையம்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை, அக்.23-

நெல்லையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்பகப் புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டு அதில் இருந்து மீண்ட பெண்களுக்கான வெற்றி விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையத்தை துவக்கி வைத்தார்.

நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மார்பக புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டு அதிலிருந்து மீண்ட பெண்களுக்கான வெற்றி விழா நிகழ்வு மருத்துவக் கல்லூரி முதல்வர் ரேவதி பாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் பங்கேற்று புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் மையத்தை திறந்து வைத்தார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு செய்துள்ள நலத்திட்டங்களை பட்டியலிட்டு கூறலாம்.10,000ம் மக்களுக்கு ஒரு மருத்துவ இடம் என்ற அடிப்படையில் மக்கள் தொகைக்கு ஏற்றாற் போல் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி என முடிவு எடுத்து உள்ள நிலையில் இனிமேல் தமிழகத்திற்கு மருத்துவக் கல்லூரி அனுமதி கிடையாது. என்று ஒன்றிய அரசு குறுகிய மனப்பான்மையோடு செயல்படுகிறது. நீட் தேர்வில் மக்கள் பல லட்சம் ரூபாயை செலவு செய்து இதுபோன்ற மருத்துவ படிப்பிற்கு வரவேண்டிய நிலை இருக்கிறது.

தமிழகத்தில் சமச்சீர் கல்வி,மெட்ரிக் கல்வி என சிறப்பான கல்வி கட்டமைப்பு உள்ளது. அதை சீர்குலைப்பதற்காக ஒன்றிய அரசு நீட் தேர்வு புதிய கல்விக் கொள்கை ஆகியவற்றை கொண்டு வந்துள்ளது.தமிழகத்தில் சுகாதார துறையின் கட்டமைப்பு மிகவும் வலுவானதாக இருக்கிறது.ஒன்றிய அரசின் மத்திய பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் குடிமை பணி தேர்வுகளில் பல்வேறு முறைகேடுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த முறைகேடுகள் களையப்பட்டால் தமிழ்நாட்டிலிருந்து அதிகமானோர் முதலிடத்துடன் தேர்ச்சி பெறுவார்கள்.

மேலும் மருத்துவ பட்ட மேற்படிப்பில் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அழுத்தம் காரணமாக 27 சதவீதம் இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களுக்கு இடம் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் இந்த முயற்சியால் தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள இதர பிற்படுத்த பட்ட வகுப்பினரும் பயன் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்லூரி கண்காணிப்பா ளர் மருத்துவர் சுப்பிரமணியன், ரபீக் மற்றும் செவிலியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மார்பக புற்று நோய் குறித்து விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்! புயலாக வலுப்பெறும்!

சென்னை, அக்.24–

மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக் கூடும் எனவும் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு அரபி கடலில் நிலை கொண்டுள்ள 'தேஜ்' புயல் அதிதீவிர புயலாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித் துள்ளது. தேஜ் புயல் நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் அதி தீவிர புயலாக வலுப்பெற்று, தென் மேற்கு அரபி கடலில், சகோத்ரா (ஏமன்) நகருக்கு 330 கி.மீ. கிழக்கு தென்கிழக்கேயும், சலாலா (ஓமன்) நகருக்கு 690 கி.மீ. தெற்குதென்கிழக் கேயும் மற்றும் அல் கைடா (ஏமன்) நகருக்கு 720 கி.மீ. தென்கிழக்கேயும் மையம் கொண்டுள்ளது. இந்நிலையில் மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்ற ழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக் கூடும் எனவும் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்ற ழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப்பெறும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் மதுரை சட்டக் கல்லூரியில் 21.10.2023 அன்று நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகை, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதில் சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், பா.கணேசன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவசேனன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக் கறிஞர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், நன்மாறன் கலந்துகொண்டனர்.


# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி









கழகம் தொடங்கிய போது





இலட்சிய நடிகர்

## எஸ்.எஸ். இராஜேந்திரன் Ex. MP

24-10-2014

இன்றும், என்றும் இதயம் நிறைந்த நினைவுடன்....

**எஸ்.எஸ்.ஆர். இராஜேந்திரகுமார் Ex. MP**

மற்றும் குடும்பத்தினர்

எஸ்.எஸ்.ஆர் பங்கஜம் சினிமாஸ், சாலிகிராமம்,

திரையரங்க வளாகத்தில் இன்று 5000 பேருக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும்.